முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுக் காலமாக இத்துறை நலிவுற்ற நிலையில் இருந்தது. எந்த ஒரு கிளை நிலையத்திலும், மருந்தகத்திலும், மருத்துவமனையிலும் பொறுப்பாக ஒரு மருத்துவரோ, கால்நடை ஆய்வாளர்களோ இல்லாத ஒரு நிலைமை இருந்தது. இந்த அரசு விரைவாக, வேகமாக அதைச் சீராக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நம்முடைய சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைக்கு இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது உரிய விளக்கங்கள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

பால் குளிரூட்டும் நிலையம்

***8815—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகரில் புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

2007 ஏப்ரல் 9]

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடைகிற வகையில், நிருவாகம் மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, அக்கொள்கையின் அடிப்படையிலே, பெரிய மாவட்டங்களாக இருக்கின்ற மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. அதன் அடிப்படையிலே தருமபுரி மாவட்டத்தை, தருமபுரி, கிருஷ்ணகிரி என்று இரண்டாகப் பிரித்து ஏறக்குறைய 4 ஆண்டுக் காலமாகிறது. ஆனால், 4 ஆண்டுக் காலமான பிறகும், தருமபுரி பால கூட்டுறவு மையம், பால் கூட்டுறவு குளிரூட்டு மையம், Powder Plant ஆகிய அனைத்தும், கிருஷ்ணகிரியிலே செயல்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்தினுடைய சிறு மற்றும் குறு விவசாயிகளினுடைய நலன் கருதி, இந்தப் புதிய மாவட்டக் கூட்டுறவு பால் மையம் தருமபுரியிலே ஆரம்பிக்கப்பட வேண்டும்; அதற்கான குளிரூட்டு மையமும் தருமபுரியிலே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டு, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே, மேலும் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை; தேவையும் இல்லாமல் இருக்கிறது. அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, வேறொரு இடத்தில் அமைத்துக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்குமா என்று கேட்டார்கள். அரசினுடைய கொள்கை முடிவில் இதுபோன்ற முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை என்பதையும் அதுபோன்ற அவசியம் அந்த மாவட்டங்களைப் பொறுத்தவரையில் ஏற்படவில்லை என்பதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலே கொள்முதல்

செய்யப்படுகின்ற மொத்த பாலின் அளவு 1,15,000 லிட்டர். இந்த மொத்த அளவில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 70,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஏறக்குறைய 70,000 லிட்டர் பாலை, ஏறக்குறைய 150 கிலோ மீட்டர் தொலைவிற்குமேல் எடுத்துச் சென்று, கிருஷ்ணகிரியிலே பதப்படுத்தி, எடுத்துச் செல்வதன்மூலமாக இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு தொடர்ந்து நட்டம் ஏற்படுகிறது என்று அந்த நிருவாகம் சொல்லிவருகிறது. அதன் அடிப்படையிலே, ஏறக்குறைய 3 ஆண்டுக் காலமாக, சேலம், வேலூர் மாவட்டங்களைவிட, அந்த மாவட்டத்திற்கு கொள்முதல் விலையில் 50 பைசா குறைவாகவே தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த நட்டத்தைப் போக்க தருமபுரியிலேயே இந்தக் குளிரூட்டு நிலையத்தை அமைத்து, நேரடியாகச் சென்னைக்குக் கொண்டு வந்து விற்பனை செய்தால் இந்த நட்டம் தவிர்க்கப்படும். விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்கின்ற காரணத்திற்காக மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து, இந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, கிருஷ்ணகிரியில் பால் குளிரூட்டு மையம் புதிதாகத் தொடங்கப்பட வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி நகரத்தில் 50,000 லிட்டர் கொள்ளளவு உள்ள குளிரூட்டு நிலையத்தோடு மட்டுமல்லாமல், அதிகமாக பால்வரத்து இருக்கிற காரணத்தால், தருமபுரி மாவட்டத்தில், வெப்பம்பட்டி, கல்லிப்பட்டி, புதுப்பட்டி, பைரநத்தம், எரியூர், எல்லூர், ஊத்தங்கரை, ஊத்தங்கரை–2, கல்லாவி உள்ளிட்ட 11 இடங்களைத் தேர்வு செய்து, சுமார் 2,000–லிருந்து 5,000 லிட்டர் வரை கொள்ளளவு உள்ள Bulk Milk Cooler நிறுவுவதற்கான ஏற்பாடு நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]